பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 18 ஞாயிற்றுக்கிழமை (03-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 260

# வன்னியிலிருந்து வரும் அகதிகள் தங்குவதற்கு மேலதிக ஏற்பாடுகள்!

## வவுனியா - மன்னார் வீதியில் ரூ. 50 லட்சம் செலவில் முகாம்

கொழும்பு, நவம்பர் 3

வன்னியிலிருந்து வவுனியா வரும் அகதிகளைத் தங்க வைப்பதற்கு வவுனியாவில் மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சகல வசதிகளையும் கொண்ட பாரிய அகதி முகாம் ஒன்று ரூ. 50 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

வவுனியா — மன்னார் வீதியில் புலி தரித்த புளியங்குளம் என்னும் இடத்தில் இந்த அகதி முகாமை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

ஏற்கனவே வவுனியா வந்துள்ள அகதிகள் வவுனியாவில் உள்ள வேப்பங்குளம் முகாம், நெலுக்குளம் அரசினர் கலைமகள் வித்தியாலயம், வெளிக்குளம் அ. த. க. பாடசாலை, வவுனியா இலங்கைத் திருச்சபை த.க. பாடசாலை, சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி அகதிகள் வந்து கொண்டிருப்பதை அடுத்து வவுனியா பாடசாலைகள் அனைத்தையும் ஒரு மாத காலம் மூடுவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது

மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் இந்த முடிவு சர்ச்சைக்குரியதாக மாறி வருவதாகவும் —

இந்தப் பாரிய அகதி முகாமை நிறுவுவது மூலம் பாடசாலைகளை மீண்டும் இயங்க வைக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவுக்கு வரும் அகதிகளில் பெரும்பாலானோர் படையினரால் கைப்பற்றப்பட்ட தமது பகுதிகளுக்கே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க்கிலிருந்து வந்த கோப்பாய் யுவதி எங்கே?

### பொலீஸார் தேடுகின்றனர்

கொழும்பு, நவ. 3

டென்மார்க்கில் இருந்து நேற்றுக்காலை இலங்கை வந்து சேர்ந்த தமிழ்ப்பெண் ஒருவர் குறித்து இலங்கையில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன.

ராணி ராஜேந்திரம் என்ற பெயரைக் கொண்ட இந்தப் பெண் டென்மார்க் அரசாங்கத்தினால் நாடுகடத்தப்பட்டுள்ளார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை வந்திறங்கிய இவர் அங்கிருந்து எங்கு சென்றார் என்பது குறித்து பொலீஸாரால் அறிய முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

விமான நிலையத்தில் இவரின் கடவுச்சீட்டை பரிசீலனை செய்த குடிவரவு — குடியகல்வு அதிகாரிகள் இவர் யாழ்ப்பா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வந்த18 பேர் தாண்டிக்குளத்தில் கைது

யாழ்ப்பாணம், நவ. 3

வன்னியில் இருந்து தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வருவோரில் 18 பேர் தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும்—

வவுனியா பிரதான இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிருஷாந்தி மற்றும் மூவரின் கொலை தொடர்பாக

# தேடப்பட்டு வந்த இராணுவத்தினர் இருவரும் கிளிநொச்சியில் கைது!

யாழ்ப்பாணம், நவ. 3

நாவற்குழியில் காணாமற் போய் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி மற்றும் அவரது தாயார் இராசம்மா குமாரசாமி, சகோதரர் பிரணவன், அயலவர் சி. கிருபாமூர்த்தி ஆகியோரின் கொலைகள் தொடர்பாக தேடப்பட்டுவந்த இரு இராணுவ கோப்ரல்கள் கிளிநொச்சியில் வைத்து இராணுவப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் நேற்று முன் தினம் யாழ். மாவட்ட பதில் நீதிபதி க. கேசவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள 7 இராணுவத்தினரும், இரு பொலீஸாரும் நாளை வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கைதான சகலரும் வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(இ- 3)

## தட்டா தெருவில் துப்பாக்கிச் சூடு; வயோதிபர் பலி

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாணம் தட்டா தெரு தடை முகாம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 12.45 மணியளவில் நடமாடிய வயோதிபர் ஒருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை விடுமுறை விடாதது குறித்து அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியம்

### ஐ.தே.க மாகாணசபைகள் விடுமுறை அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் நாளை திங்கட்கிழமை அரசினால் பொது விடுமுறையாகப் பிரகடனம் செய்யப்படாதது குறித்து அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளைய தினம் பொது விடுமுறை தினம் அல்ல என்ற அறிவிப்பையும் அரசாங்கம் நேற்று விடுத்துள்ளது

இந்த அறிவிப்பை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் தற்போது உள்ள மாகாணசபைகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

ஐ. தே. க. வின் ஆட்சியில் உள்ள வடமேல், வடமத்திய, ஊவா, சப்பிரகமுவ, மத்திய மாகாணசபைகள் நாளைய தினத்தை விடுமுறை [illegible] அறிவித்து பூரண து[illegible] தைப் பிரகடனம் செய்துள்ளன.

இதற்கிடையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இறுதிச் சடங்குகள் களனிக்கு மாற்றப் பட்டதுக்கு அவரின் விருப்பமே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது இறுதிச் சடங்குகள் களனி ரஜமகாவிகாரைக்கு அருகில் நடத்தப்பட வேண் [illegible] எழுதிவைத்திருந்தார்.

(இ-10)

## நகரின் மத்தியில் நேற்று கிரனேட் குண்டுவெடிப்பு

### 11 பேர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். நகரில் நேற்று இடம் பெற்ற கிரனேட் குண்டு வெடிப்பில் பதினொரு பேர் காயமடைந்தனர். இவர்களில் மூவர் யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றனர். ஏனையோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பஸ் நிலையத்துக்கு அருகாமையில் ஆஸ்பத்திரி வீதியில் காலை 10-30 மணி அளவில் இந்தக் கிரனேட் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்த பதினொரு பேரின் விவரம் வருமாறு:-

ரட்ணம் கதிரவேலு (வயது 59, சாவகச்சேரி), ரி. பிரபாகரன் (வயது 32, நாவாந்துறை), எஸ். கிருபரன் (வயது 16, மானிப்பாய்), ஜெயசுதராசன் (வயது 19, கரவெட்டி), எஸ். செல்வச்சந்திரன் (வயது 47, கட்டைப்பிராய்), எஸ். கேதாரகௌரி (வயது 47, யாழ்ப்பாணம்), ரி. சரஸ்வதிப்பிள்ளை (வயது 64, நயினாதீவு), ரி. வசீகரன் (வயது 17, நல்லூர்), எஸ். சிங்கராஜா (வயது 55, குப்பிளான்), எஸ். ராஜேஸ்வரன் (வயது 21, அல்வாய்), எஸ். கனகராஜசிங்கம் (வயது 43, புங்குடுதீவு).

(இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CHUNDIKULI GIRLS' COLLEGE INSTALLATION SERVICE

A Service of Installation of MRS. T. RAJARATNAM as Principal of Chundikuli Girls' College, will be held at St. John, the Baptist Church, Chundikuli on Monday, 4th 1996 at 3-00 p.m. (New Time).

Presence of Parents, Old Girls & Well wishers will be appreciated.

Manageress
(C/3452) CHUNDIKULI GIRLS' COLLEGE



## ஆன்ம சாந்திப் பிரார்த்தனை

### அன்ரன் ஜெயவேந்திரா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட அன்ரன் ஜெயவேந்திரா (25 - 10 - 96) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மனோ அனற்றின் பாசமிகு கணவரும், சாந்தா, றஞ்சித், லக்சுமி, றவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி. S. E. அல்பிரட்டின் மகனும் ஜெயராணி, செபஸ்தியாம்பிள்ளை, ஜெயவதி, பெனடிக்ற், ஜெயராஜா, காலம் சென்ற ஜெயநாயகம், மலர் பெனடிக்ற், மணி கனகசுந்தரம், றஞ்சித் விக்னராஜா, நவமணி சாள்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவரின் ஆன்ம சாந்திக்காக (05 - 11 - 96) செவ்வாய்க்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து அவரின் ஆன்மசாந்திக்காக செபிக்கும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. J. சாள்ஸ் (மைத்துனர்)

5/4, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (43465)


## எழுத்தாளர் யாழ்வாணன் காலமானார்

எழுத்தாளர் யாழ்வாணன் (நா. சண்முகநாதன்) இந்தியாவில் காலமானார்.

யாழ். மாநகர சபையில் கடமையாற்றி வந்த இவர், இலக்கியக் கூட்டங்களை ஒழுங்கு செய்தல், இலங்கை, இந்திய எழுத்தாளர்களை அழைத்து வந்து கருத்தரங்குகளை நடத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வந்தார்.

யாழ். இலக்கிய வட்ட ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் வட்டத்தின் செயலாளராகவிருந்து முப்பதுக்கும் மேலான தரமான நூல்களை வெளியிட்டார். யாழ்வாணன் எழுதி வெளியிட்ட 'அமரத்துவம்' எனும் சிறுகதை நூல் மிகவும் சிறந்ததொரு படைப்பாகும். (அ)

## திருமலை சிறை உடைப்பு:

# படகில் தப்பியோடிய 11 பேர் பிடிபட்டனர்

கொழும்பு, நவ. 3

திருகோணமலையில் சிறை உடைப்புச் சம்பவத்தின் போது படகு ஒன்றில் தப்பிய 11 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறை உடைப்புச் சம்பவத்தின் போது கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

சிறைவாசலில் காவலுக்கு இருந்த இராணுவ கோப்ரல் ஒருவரையும் வேறு நான்கு பாதுகாப்பு படையினரையும் தாக்கி விட்டே இவர்கள் தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்தச் சிறை திருமலை சுங்க வீதியில் உள்ளது.

சம்பவதினம் நள்ளிரவு 11-30 மணியளவில் சிறுநீர் கழிக்கப் போவதாகக் கூறி கைதிகளின் கூண்டில் இருந்து வெளியே வந்த இரு கைதிகள் தங்களுக்குப் பாதுகாப்பாக வந்த இராணுவ கோப்ரலையும், பொலீஸ் உத்தியோகத்தரையும் தாக்கி அவர்களின் இரு தன்னியக்க துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு அவர்களைச் சிறைச்சாலை அறையில் போட்டுப் பூட்டிவிட்டு ஏனைய கைதிகளுடன் மதில் ஏறித்தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோரில் இன்னும்நால்வர் மட்டும் பிடிபடவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கோப்ரல் ஒருவரும் உயிரிழந்திருந்தார். (இ-3)


## VACANCY FOR A WARDEN

### மெதடிஸ்த திருச்சபையின் முதியோர் இல்லம்

புத்தூர்

மேற்கண்ட இல்லத்துக்கு ஒரு பெண் அதிகாரி (Warden) உடனடியாகத் தேவை.

30 க்கும் 50 க்கும் இடைப்பட்ட வயதுடைய கிறிஸ்தவராக இருக்க வேண்டும்.

தகைமையுள்ளோர் நவம்பர் 11 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
மெதடிஸ்த முதியோர் இல்லம்,
'சொலமன் இல்லம்'
120, இரண்டாம் குறுக்குத் தெரு,
(சி/3400) யாழ்ப்பாணம்.


## வேலணை பிரதேச செயலர் பிரிவு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர்வரும் ஜனவரி முதல் பிரதேச செயலர் பிரிவாக தரம் உயர்த்தப் படவிருக்கிறது.

இந்தப் பிரிவுக்கு பிரதேச செயலராக க. சண்முகநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

வலி—வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலர் பிரிவாக தரம் உயர்த்தப்படவிருந்த போதிலும்—

நிர்வாக சேவை அதிகாரி இலாத காரணத்தால் அதைத் தரம் உயர்த்துவது பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

குடாநாட்டில் உள்ள ஏனைய மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகளும் காலக்கிரமத்தில் பிரதேச செயலர் பிரிவுகளாக தரம் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## திருத்தம்

நேற்றைய உதயன் 4 ஆம் பக்கத்தில் வெளியான, யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பதவி வெற்றிட விளம்பரத்தில் —

வேதனம்: 855—30x7—40x8 — 1,385 என்றிருக்க வேண்டும்.

885 — 30x7 -- 40x8 — 1,385 என்று அச்சானது தவறாகும்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினம் திரிபுரியம்மா

மலர்வு: 14—10—1936
உதிர்வு: 22—10—1995
திதி: 09 — 11 — 96

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமான
பாசச் சுடரே, எம் குடும்பத்தின் முத்தான முதல் விளக்கே
கடலலைகள் ஓய்ந்தாலும், உம் நினைவலைகள் மாறாது
கூடி நாம் வாழ்ந்து குதூகலித்த அந்த நாள்கள்
ஓடி மறைந்தாலும் நெஞ்சம் மறந்திடுமா?
கண்ணை இமை காப்பது போல் எங்களைக் காத்து
கந்தசஷ்டி தினத்தினிலே கந்தனடி சேர்ந்தீர்களே!
உங்கள் தங்கமகனைக் காணாத துயருடன் சென்றீர்களே!
உங்கள் பிரிவால் ஆழ்ந்த துயரத்துடன்
உம்மை இனி எங்கு காண்போம் என்றிருக்க
தவமிருந்து பெற்ற உங்கள் பால முருகனை
பத்தாவது திங்களில் அழைத்தீர்களே!

## 60-ம் நாள் நினைவஞ்சலி



### செல்வன் இரத்தினம் ஜெயன்

(முதலாம் வருட வர்த்தகத்துறை மாணவன் யாழ். பல்கலைக் கழகம்)

மலர்வு: 24—10—1972
உதிர்வு: 06—09—1996
திதி: 04 — 11 — 96

எங்கள் குடும்பதீபமே ஜெயன்
அவனியை அவலமாய் விட்டகன்று இரு திங்களானதே!
ஆனாலும் எம்துயர் ஆற்ற முடியவில்லையே!
உன்னை நினைந்து உள்ளத்தால் உருகுகின்றோம்!
என்றும் எம்மனதை விட்டகலா ஒப்பில்லா மாமணியே!
ஏன் இந்தக் கொடுமை எப்படித்தான் இதை மறப்பதோ?
நெஞ்சிற் கவலை எல்லாம் நிற்காமல் ஓட்டுமந்தப்
புன்சிரிப்பைக் காணாது புத்தி தடுமாறுதையா!
கல்வியே உயிர் மூச்சு என்றிருந்தாயே
கனியாக முன்பே விதையாகிப் போனாயே!
நீர் வருவீர் என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்திருக்க
கொழும்பு மாநகரில் காலன் உனைத் தேடி அணைத்தானே!

குறிப்பு:- எமது குல விளக்கு நோய்வாய்ப்பிட்ட போது இங்கும், கொழும்பிலும் சகல வழிகளிலும் உதவி புரிந்த பெரியோர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், கொழும்பில் நடைபெற்ற இறுதிக் கிரியையில் பங்கு பற்றியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இங்கு நேரிலும், தபால் மூலமும், பத்திரிகை மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 04—11—1996 திங்கட்கிழமை நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மா பத்மநாதன் மாமா
கைதடி தெற்கு, கைதடி.
[43468]

இ. இரத்தினம் (பன்னாலை),
பிள்ளைகள்.



## ZOOLOGY

துரிதமீட்டல்
Mr. ஞானேந்திரன்
SHAMROCK
யா/ஈச்சமோட்டை வீதி
(மறவகுளத்திற்கு அருகில்)
(43472)



## வேலையாட்கள் தேவை

விரைவில் ஊதுபத்தி தொழில் ஆரம்பிக்கப்பட உள்ளதால் அனுபவம் உள்ளவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சோமசுந்தரம்
களஞ்சியம்
313, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(43464)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# முகாம்களின் தற்பாதுகாப்புக்காக கிழக்கில் யுத்தம் புரியும் படையினர்

## ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெறும் வடக்கு-கிழக்கு போர் முனை

ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெறுவது என்ற ரீதியில்தான் வடக்கு—கிழக்கு போர் முனை நிலைவரம் காணப்படுகிறது.

யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் படையினர் போரிட்டபோது கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றன.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் நடவடிக்கைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் கிழக்கிலும் தாம் கட்டுப்பாட்டை இழக்கவில்லை என்று காட்டுவதைப் போலவே அமைந்துள்ளன. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றி நிலைகொள்ளுமளவுக்கு கிழக்கில் படையினரின் பலம் போதுமானதாக இல்லை.

### சண்டையிலிருந்து விலகும் புலிகள்

கிழக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'அலை வேக' நடவடிக்கையும் தோல்வியில்தான் முடிந்தது.

கிழக்கில் உள்ள படையினரால் தமது பலத்தை ஒன்று குவித்து ஒரு குறிப்பிட்ட பகுதியை நோக்கி முன்னேற முடியும்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாடடில் உள்ள பகுதியை நோக்கி படையினர் முன்னேற ஆரம்பித்தால் புலிகளால் அதனைப் பூரணமாகத் தடுத்து நிற்க முடியாது.

குண்டுகளை சரமாரியாகப் பொழிந்து தள்ளும் விமானப் படையின் உதவியோடு படையினர் முன்னேறிச் செல்ல கிழக்கு மாகாணத்தின் தள மற்றும் கள நிலைவரம் சாதகமாக இருக்கும்.

அவ்வாறான ஒரு சண்டையில் புலிகளின் அணிகள் நேருக்கு நேர் படையினரை எதிர்கொண்டால் பாரிய இழப்புக்களைச்சந்திக்கவேண்டியிருக்கும்.

அதனால் புலிகளின் அணிகள் சண்டையிலிருந்து விலகிக் கொள்ளுகின்றன.

### உள்ள முகாம்களைப் பாதுகாப்பதே முக்கிய குறிக்கோள்

கிழக்கில் தற்போது படையினரின் தந்திரோபாயம் புதிய முகாம்களை நிறுவிக் கொள்வதல்ல, இருக்கின்ற முகாம்களைப் பாதுகாத்துக் கொள்வதுதான்.

அந்த முகாம்களைத்தேடி புலிகளின் அணிகள் வராமல் தடுப்பதற்காக அடிக்கடி முகாம்களில் இருந்து முன்னேறிச் சென்று புலிகளின் அணிகளை பின்னால் ஒரு தள்ளு தள்ளிவிட்டுப் படையினர் திரும்பி வந்துவிடுகின்றனர்.

அதாவது தமது முகாம்களின் தற்பாதுகாப்புக்கான ஒரு யுத்தத்தை மட்டுமே கிழக்கில் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் புலிகளின் அணிகளில் பெரும் தொகையானோர் பலியானதாகவும், தாம் புலிகளின் அணிகளை அழித்தொழிக்கவே தாக்குதல் நடத்தியதாகவும் படையினர் தரப்பால் பிரசாரம் செய்யப்படுகிறது. அப்பிரசாரத்தின் மூலமாக தமது தற்காப்பு யுத்தத்தை தாக்குதல் யுத்தமாகவும், அழித்தொழிப்பு யுத்தமாகவும் படையினர் சித்திரிக்க முற்படுகின்றனர்.

### படையினருக்கு ஆட்பலம் இல்லை

கிழக்கில் புலிகளின் பலம் என்பது அவர்கள் தமது தாக்குதல்களால் பெற்ற பலனைவிட படையினரின் ஆட்பல பலவீனம் சார்ந்த ஒன்றாகவே இருக்கிறது.

கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்களை புலிகள் நடத்தியிருந்தாலும்கூட படையினரின் ஆட்பலம் அதிகமாக இருக்குமானால் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் தான் இருந்திருக்கும்.

ஆனால் ஒருவரையறைக்கு மேல் படையினரால் தமது ஆட்பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாது. எனவே தற்போதுள்ள பலத்தை வைத்துக் கொண்டு கிழக்கில் புதிய முகாம்களை நிறுவினால் அவை புலிகளால் தாக்கப்படும்.

தற்போது கிழக்கில் உள்ள முகாம்கள் பலமாக இருப்பதால் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தற்பாதுகாப்பு தேடிக்கொள்ள முடிகிறது.

கிழக்கில் புலிகள் முகாம் தாக்குதல் ஒன்றில் ஈடுபட வேண்டுமானால் தமது அணிகளை பெருமளவில் ஒன்று குவித்துத்தான் தாக்க வேண்டும்.

முகாம்கள் பரவலாக நிறுவப்படுமானால் புலிகளுக்கு தாக்குதல் நடத்த வசதியாகி விடும்.

எனவே தமது பலத்திற்கு ஏற்பவே கிழக்கில் படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

புலிகளும் தமது பலத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் பாரிய சண்டைகளைத் தவிர்த்து வருகின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குவது, படையினர் நிலைகொண்டுள்ள நகர்களில் சிறு சிறு குழுக்களாகவும், தனிநபர்களாகவும் கெரில்லாக்களை ஊடுருவச் செய்து அப்பகுதிகளில் சீர்குலைவுகளை ஏற்படுத்துவது என்பவற்றில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

### நகரத்தை கிடுகிடுக்க வைக்க 2 பேர் போதும்

இத்தகைய நடவடிக்கைகளால் தமது கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களைப் பாதுகாப்பதிலேயே படையினரின் பலத்தில் பெரும்பகுதி செலவாகிக் கொண்டிருக்கிறது.

புலிகளில் இரண்டு பேர் போதும், ஒரு நகரத்தையே கிடு கிடுக்க வைத்துவிடலாம். அதன் பின்னர் தேடுதல் நடவடிக்கைகள், சோதனைகள், கைதுகள், தடை அரண்கள் மேலதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று படையினருக்கு ஏகப்பட்ட வேலைகள். நிறைய ஆட்களும் தேவைப்படுவார்கள்.

அது மட்டுமல்ல தமது நடவடிக்கைகள் காரணமாக குறிப்பிட்ட நகர்களில் உள்ள தமிழ் மக்களின் அதிருப்திகளையும் படையினர் சம்பாதித்துக் கொள்வார்கள்.

கிழக்கில் படையினரின் பலம் அவர்களது ஆட்பலத்தில் தங்கியுள்ளது. ஆனால் புலிகளின் பலம் குறைந்த ஆட்பலத்தில் அவர்களால் மேற் கொள்ளப்படும் கச்சிதமான தாக்குதல்களில் தங்கி நிற்கிறது.

### திருமலைச் சம்பவம்

சமீபத்தில் திருகோணமலையில் ஒரு பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை புலிகள் சுட்டுக் கொன்றனர். மேலோட்டமாகப் பார்த்தால் எவ்வித காரணமும் இல்லாத ஒரு கொலை போலவே அது தோன்றும்.

குறிப்பிட்ட சப் - இன்ஸ்பெக்டர் சமீபத்தில் தான் திருமலைக்கு மாற்றலாகி வந்திருந்தார். அதனால் திருமலையில் அட்டகாசம் செய்த ஒருவர் என்றும், அதனால் சுடப்பட்டார் என்றும் சொல்வதற்கு இடமில்லை.

எனினும் குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் அடிக்கடி தனியாக ஒரு பாதை வழியாகச் சென்று வருகிறார். இடுப்பில் பிஸ்டல் வைத்திருக்கிறார் என்ற தகவல் புலிகளுக்குக் கிடைத்தது.

சுலபமான குறி, ஒரு பிஸ்டலும் கிடைக்கும். நகரில் ஒரு தாக்குதல் செய்த மாதிரியும் இருக்கும் என்று கணக்குப் போட்டனர். காரியத்தை முடித்தனர்;

மார்பில் மூன்று சூடு. சூடுபட்டு விழுந்த பின்னர் அருகில் சென்று தலையில் ஒரு சூடு. அவரது இடுப்பில் இருந்த பிஸ்டலையும் எடுத்துக் கொண்டு இரண்டு புலிகளும் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர்.

அதன் பின்னர் தான் ஆரம்பமானது அகோரத் தாண்டவம். மக்களுக்கு தரும அடி. தமிழ்க்கட்சி அலுவலகங்களுக்குள் புலிகளைத் தேடி வேட்டை. சிங்கள மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம். ஹர்த்தால்.

விளைவு; அந்த சப்-இன்ஸ்பெக்டரை தேவையில்லாமல் சுட்டுவிட்டார்களே. இது தேவைதானா என்று அதிருப்தி தெரிவித்த மக்கள் கூட, கடைசியில் பொலீசார் மீது அதிருப்தி கொள்வதில் முடிந்திருக்கிறது.

புலிகள் மீது தப்பித்தவறிக்கூட யாரும் அதிருப்திப் பட்டுவிடக்கூடாது என்ற கரிசனையுடன் திருமலைப் பொலீஸார் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். புலிகள் எப்படி நன்றி சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை.

### புலிகளின் செல்வாக்கு

வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களிடம் புலிகளுக்கு இருக்கும் செல்வாக்கைவிட, படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களிடம் தான் புலிகளின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது.

'புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கவே யுத்தம்' என்ற கோஷம் வெளியுலகைக் கவரமட்டுமே அரசாங்கத்திற்கு கைகொடுக்கிறது. [illegible] தமாகவே தெரிகிறது.

வடக்கு - கிழக்கில் படையினரின் வெற்றிகள் தென்பகுதியில் அரசாங்கத்தின் 'இமேஜை" உயர்த்தலாம். ஆனால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடம் அரசாங்கம் தனது 'இமேஜை'இழந்து வருகிறது.

யாழ். குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ளனர். புலிகளின் நிர்வாகமும், தளப் பிரதேசம் என்ற நிலையும் இல்லாமல் போய் இருக்கிறது. ஆனால் படையினரின் நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டு மக்களிடம் புலிகளின் அவசியம் உணரப்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

படைபலத்தின் மூலம் மக்களையும் தமது பக்கம் திருப்பி விடலாம் என்று அரசாங்கம் நினைக்குமானால் அது தவறானது என்பதையே நிகழ்ச்சிப் போக்குகள் நிரூபிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி நகரையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

### பிடித்த பகுதிகளை இழக்கும் நிலை

போரில் புதிய பகுதிகள் கைப்பற்றப்படுவது பிரசார நோக்கில் அரசுக்கு சாதகமாக இருக்கின்றது.

ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிகும் நடக்கும் அரசியல் யுத்தத்தில் வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பெறும்வெற்றிகள் ஆளும் கட்சிக்கு துருப்புச் சீட்டுக்கள் தான்.

ஆனால், புதிய பகுதிகளைப் பிடித்துவிட்டதாக காட்டுவதற்கான பிரசாரத்திற்கு விலையாக ஏற்கனவே தமது பிடியில் இருந்த பகுதிகளை அரசாங்கம் இழக்க வேண்டி இருக்கிறது.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கான படைக் குவிப்புக்காக யாழ். குடாநாட்டிலிருந்தும் ஒரு தொகுதிப் படையினரை நகர்த்த வேண்டி ஏற்பட்டது.

அதனால் யாழ். குடாநாட்டில் பல பகுதிகளில் புலிகளின் அணிகள் மீண்டும் நிலைகொண்டுள்ளன. தமது உறுப்பினர்களின் நினைவு தினக் கூட்டங்களையும் சுதந்திரமாக நடத்திக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் பல முகாம்கள், காவலரண்கள் என்பவற்றை படையினர் மூட வேண்டியநிலையும் ஏற்பட்டுள்ளது.

அதே நேரம் பூநகரி இராணுவ முகாமும் மூடப்பட்டு விட்டது.

### பூநகரி முகாம்

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது பூநகரி முகாம். அந்த முகாமை அகற்றுமாறு புலிகள் பிடிவாதமாக நின்றனர். முடியவே முடியாது என்று விட்டார்கள் படையினர். இப்போது படையினரே மூடி விட்டனர்

எனினும் அன்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது.

யாழ். குடாநாட்டை இராணுவரீதியாக சுற்றிவளைக்கும் வேலிகளில் ஒன்றாகவே பூநகரி முகாம் இருந்தது. தற்போது யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பூநகரி முகாமின் முன்னைய முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

ஆனாலும் படைமுகாம் மூடப்பட்டதற்கு அது மட்டும் காரணமல்ல.

பூநகரி முகாமுக்கு சமீபமாகவுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு புலிகள் அறிவித்திருந்தனர். இச் செய்தி படையினரின் காதுகளுக்கும் எட்டியதாகத் தெரிகிறது.

உண்மையில் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டார்களா, அல்லது படையினருக்கு அப்படிச்செய்தியை எட்டவைத்து முகாமை மூடுவதற்கு தூண்டினார்களா? என்பது சந்தேகமாக இருக்கிறது.

படையினருக்கும் பூநகரி முகாமை முன்னைய பலத்தில் வைத்திருக்க முடியவில்லை. பூநகரி முகாமில் இருந்த படையினரில் ஒரு பகுதியினர் கிளிநொச்சிக்கு எடுக்கப்பட்டுவிட்டனர்,

கிளிநொச்சியில்தொடர்ந்து நிலை கொண்டிருக்க வேண்டுமானால் படைபலம் கட்டாயம் தேவை. எனவே பூநகரி முகாமை மூடிவிடுவது தான் உசிதம் என்று படையினர் நினைத்து விட்டனர்.

இப்போது பூநகரியில் புலிகள் நிலை கொண்டுள்ளனர்.

### வரலாற்றில் இல்லாத மாபெரும் தோல்வி

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக யாழ்குடாநாட்டின் சில பகுதிகளையும், பூநகரியையும் படையினர் புலிகள் வசம் விட்டுள்ளனர்.

வன்னியில் முல்லைத்தீவு மாவட்ட தலைநகரான முல்லைத்தீவு புலிகளிடம் சென்றுள்ளது. ''ஓயாத அலைகள்'' நடவடிக்கை மூலமாக முல்லைத்தீவு நகரை புலிகள் கைப்பற்றினார்கள். அதே சமயம் வன்னியில் மற்றொரு மாவட்டமான கிளிநொச்சியின் தலைநகரை புலிகள் இழந்துள்ளனர்.

முல்லைத்தீவு தாக்குதலுடன் ஒப்பிடும் போது படையினரின் கிளிநொச்சி நோக்கிய ''சத்ஜய'' வெற்றி சமமாகக் கொள்ளப்பட முடியாது.

முல்லைத்தீவில் 1500 படையினர் வரை பலியானார்கள். இரண்டு ஆட்டிலறிப் பீரங்கிகள், பவள் கவச வாகனம், 1402 ஏ. கே. ரக துப்பாக்கிகள், 903 ஆட்டிலறிக் குண்டுகள், 120 எம். எம். மோட்டார் குண்டுகள் மொத்தம் 2297 ஆகியன உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளிடம் சென்றன.

இலங்கையின் யுத்த வரலாற்றில் மிகப் பாரிய தோல்வி அரச படையினருக்கு ஏற்பட்டது.

தாக்குதலின் விளைவுகளோடு ஒப்பிட்டால் சர்வதேச ரீதியான 'முதலாவது பெரும் கெரில்லாத் தாக்குதல்' என்ற பெயரையும் முல்லைத் தாக்குதல் பெற்றுள்ளது.

உலகில் வேறெங்கும் மிகக் குறுகிய நாள்களில் இப்படியான பாரிய உயிரிழப்பை ஏற்படுத்திய தாக்குதல் இதுவரை நடைபெறவில்லை. முல்லைத்தாக்குதலின் உக்கிரம் அந்தளவுக்கு இருந்தது.

### மிகைப்படுத்தி வெளியிட்ட செய்தி

'சத்ஜய 3' இல் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்பை படைத்தரப்பு மிகைப்படுத்தியே செய்திகள் வெளியிட்டது.

இதுவரை கிடைத்த தகவலின்படி 'சத்ஜய' நடவடிக்கை மூலம் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்பு 150 பேர் வரை தான். படையினர் தரப்பிலும் பலத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமுரசு'' சஞ்சிகையின் வார இதழில் ''வெற்றிகளும் வெளியே தெரியாத தோல்விகளும்'' எனற தலைப்பில் ''நாரதர்'' எழுதிய''எக்ஸ்ரே ரிப்போர்ட்'' இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைத்தொடுவாயில் புலிகளின் "ராடர்"; அரச படையினர் கண்டுபிடித்தது எப்படி?

கடந்த ஜூலை மாதம் முல்லைத்தீவுத் தளம் அழிக்கப்பட்டது முதல் கொக்குத்தொடுவாய் தொடக்கம் வெற்றிலைக்கேணி வரையான-வட-கிழக்கில் உள்ள— கடற்கரையோரப் பிரதேசம் விடுதலைப்புலிகளின் — குறிப்பாக கடற்புலிகளின் — நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பகுதியாகவே இருந்து வருகின்றது.

இந்திய, இலங்கைக் கடற்படைகளின் கண்களுக்கு மண்ணைத் தூவிவிட்டு, ஆயுதங்களைக் கொண்டு வந்து இறக்கவும் —

வெளிநாடுகளுடனான சர்வதேசப் போக்குவரத்துத் தொடர்புகளை வைத்துக் கொள்ளவும்—

புலிகளுக்கு உள்ள ஒரேயொரு வாய்ப்பான பிரதேசமாக இந்தக் கரையோரமே விளங்கியது.

முல்லைத்தீவுத் தளம் இருந்த போது கூட அத்தளத்தினால் சில கிலோ மீற்றர் தூர கடற்கரைப் பிரதேசத்தையே கட்டுப்படுத்த முடிந்தது.

எஞ்சிய — நீண்ட — கடற்கரையோரப் பிரதேசம் படைகளின் கட்டுப்பாடின்றி ''சுதந்திர பூமியாக'' விளங்கியதும் —

அந்தக் கடற்கரையோரப் பிரதேசத்திலிருந்து வன்னிப் பெரு நிலப் பரப்பின் மத்தியில் — அடர்ந்த காடுகளுக்கு இடையில் — அமைந்திருக்கும் புலிகளின் மறைவான தளங்களுக்கு புலிகள் சாதாரணமாகச் சென்று வருவதைத் தடுக்க எந்தத் தடையும் இல்லாததும் —

இக்கடற்கரையோரம் புலிகளுக்கு ''சொர்க்க பூமியாக'' விளங்குவதற்குக் காரணமாயிற்று.

### உளவுத் தகவல்கள்

இந்தக் கடற்கரையோரத்தை புலிகள் நன்கு பயன்படுத்துகின்றார்கள் என்பது அவ்வப்போது கிடைக்கும் உளவுத் தகவல்கள் மூலம் அரசுப் படைகளுக்கு நன்கு தெரிந்திருந்தது.

கடற்படையும், விமானப் படையும் இந்தக் கடற்கரையோரப் பிரதேசம் குறித்து விசேடமாகக் ''கண்'' வைத்திருந்தாலும் கூட அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு புலிகளின் கப்பல்கள் இக்கரையோரப் பிரதேசத்தினூடாக எப்படியோ—மாயமாக— ஆயுதங்களையும், முக்கிய இராணுவத் தளபாடங்களையும் புலிகளுக்கு இறக்கி விட்டுத் தப்பி விடுகின்றன.

ஆழ்கடலிலிருந்து புலிகளின் கப்பல்கள் வட-கிழக்கு கடற்கரையோரத்தை நோக்கி நகருகின்றன என்ற தகவல் கிடைத்ததும் கடற்படையின் பெரிய அணி அப்பிரதேசத்தை நோக்கி விரைய

## பகுதி - 1

ஆரம்பிக்கும்; ஆனால் புலிகளின் கப்பல் அங்கு இருக்காது; மாயமாய் மறைந்து விடும்.

ஆரம்பத்தில் இது குறித்து படை அதிகாரிகள் ஆச்சரியப்பட்டாலும் பின்னர் அவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிந்தது

### 'ராடர்' நிலையம்

கடற்படைக் கப்பல்கள், படகுகளின் நடமாட்டத்தை அவதானிக்கக் கூடிய—நீண்ட அகன்ற பிரதேசத்துக்குள் இடம் பெறும் நகர்வுகளை கண்டறியக் கூடிய—வலுமிக்க — 'ராடர்' நிலையம் ஒன்றைப் புலிகள் இயக்குகின்றார்கள் என்பதே அது.

அந்த 'ராடர்' மூலம் கடற்படை நகர்வுகளை அவதானித்துக் கொண்டு புலிகள் பதில் நகர்வுகளை மேற்கொண்டு தப்பி விடுகின்றார்கள்.

ராடர் கருவிக்குத் தேவையான சமிக்ஞைகளை வெளியே அனுப்பி—மீண்டும் பெற்றுக் கொள்ளும்—அரைக் கோள வடிவ அன்ரனாக்கள் வழமையாக உயரமான ஓரிடத்தில் அல்லது கோபுரத்தில் வானத்தைப் பார்த்தவாறு பொருத்தப்பட்டிருப்பது வழமை. ஆனால் அத்தகைய உயரக் கோபுரங்கள் ஏதும் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் இருப்பதாக உளவுத் தகவல்களோ அல்லது அப்பகுதிகளுக்குமேல் பறந்து திரியும் விமானப்படை விமானங்களோ தெரிவிக்கவில்லை,

எனவே பக்கத்தில் பெரிய மரங்கள், மறைப்புகள், கட்டடங்கள் இல்லாத சமதரைப் பகுதியில் — அனேகமாக கடற்கரையோரப் பிரதேசத்தில் — இத்தகைய ராடர் நிலையமும் அதன் அன்ரனாவும் அமைக்கப்பட்டிருக்கும் என ஊகிக்கப்பட்டது.

'ராடர்' நிலையப் பகுதியை விமானங்கள் எவையும் நெருங்கினால், அவை 'ராடர்' நிலையத்தைக் கண்டு பிடிக்க முதல் நிலையத்தை உருமறைப்புச் செய்து மூடிவிடும் ஏற்பாடுகளையும் புலிகள் செய்திருப்பர் என்று கருதப்பட்டது

இந்த ஊகத்தின் அடிப்படையில் வட-கிழக்கு கடற்கரையோரம் குறித்து கடற்படை ஊன்றிக் கவனம் எடுக்கத் தொடங்கியது.

அவ்வேளையில் தான் — கடந்த மாத முற்பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

★ ★ ★

### கடற்படை அதிகாரி வருண கலகே

ஸ்ரீலங்கா கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் சமந்த வருண கலகே (வயது 26) என்ற இளம் அதிகாரி தான் புலிகளின் ராடர் நிலையத்தை அழிக்க எடுக்கப்பட்ட முப்படையினரின் கூட்டு அதிரடி நடவடிக்கைக்கு காரணமானவர்; அந்த நடவடிக்கையிலேயே பலியானார். அவர் பலியான விவரத்தை கட்டுரைத் தொடரில் பார்ப்பதற்கு முன்னர் அவரைப் பற்றி சில விடயங்கள் ...

கலகே சிறந்த நீச்சல் வீரர்; கடற்படையில் நீச்சல் தொடர்பாக பல சாதனைகளைப் புரிந்தவர்; எங்கும், எந்த நேரத்திலும் எதிரியைச் சந்திக்கக் கூடிய துணிவு மிக்கவர் என முப்படைகளுக்குள்ளும் மதிக்கப்பட்ட ஓர் அதிகாரி.

கடற்படையின் விசேட படகு அதிரடிப்படையின் அதிகாரியான அவர், 1991 முதல் 1993 வரை பூநகரி நாகதேவன் துறையில் இருந்து செயற்பட்ட கடற்படை அணிக்கு பொறுப்பாக இருந்தவர்.

1993 நவம்பரில் பூநகரித் தளம் விடுதலைப் புலிகளின் 'தவளைப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கைக்கு இலக்காகி தகர்க்கப்பட்ட போது நாகதேவன் துறையிலிருந்த கடற்படை அணியை வீரத்துடன் போரிடச் செய்தவர் இவர் என்று கொழும்புப் பத்திரிகைகள் புகழாரம் சூட்டியுள்ளன.

சுமார் ஆயிரத்து ஐந்நூறு துருப்புக்களைக் கொண்டிருந்த பூநகரி இராணுவத் தளம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அத்தளத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பின்னரும் கூட, தமது இருநூறு கடற்படைச் சிப்பாய்களுடன் சேர்ந்து, நாகதேவன் துறையில் நெருக்கமாக நின்று புலிகளுடன் நேருக்கு நேர் மோதியவர். அந்த மோதலால் பயன் ஏதுமில்லை என்பதை உணர்ந்து பின்வாங்

## தொகுப்பு: கவி

கும்படி கடற்படைத் தலைமையகம் உத்தரவிட்ட போது, நாகதேவன் துறைத் தளத்தை அழித்துவிட்டு தமது படைகளுடனும், ஏனைய அதிகாரிகளுடனும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி — குடாக் கடல் ஊடாக — பல மைல் தூரம் நகர்ந்து ஒரு நாளின் பின் பாதுகாப்பாக ஆனையிறவுத் தளத்தை வந்தடைந்தவர் என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தன.

'ராடர்' நிலையம் மீதான முப்படையினரின் கூட்டு அதிரடி நடவடிக்கைக்கு கால்கோள் இட்ட சம்பவம் கடந்த மாத முற்பகுதியில் இடம்பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் இந்த அதிகாரி கலகேதான்.

### கடற்படைக்கு சந்தேகத்தை ஏற்படுத்திய சம்பவம்

இரண்டு சிறிய கடற்படைப்படகுகளில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படை அணி ஒன்றுக்கு அப்போது கலகே தலைமை வகித்துக் கொண்டிருந்தார்.

ஆனையிறவுக்குக் கிழக்கே —குடாக் கடலையும் வங்காள விரிகுடாவையும் பிரிக்கும் மெல்லிய, நீண்ட நிலப்பகுதியில் அமைந்துள்ளது சுண்டிக்குளம். வெற்றிலைக்கேணி தளத்திலிருந்து தெற்கே எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் அது உள்ளது.

ஆழ்கடலிலிருந்து அவ்வப்போது கரைக்குச் சற்று சமீபமாக வந்து நிலைமையை நோட்டமிட்டவாறு சென்று கொண்டிருந்தன கடற்படையின் சிறிய படகுகள் இரண்டும். படகிலிருந்து 'பைனாகுலர்' மூலம் கரையை நோட்டமிட்ட கடற்படையினர் கரையில் சாரத்துடன் ஒரு நபர் நடமாடுவதைக் கண்டனர். அவர் சாதாரண ஒரு பொது மகனாக இருப்பார் என எண்ணிய கடற்படையினர், அவரை வளைத்துப் பிடித்தால் அப்பகுதியில் கடற்புலிகளின் நடமாட்டம் பற்றி அவர் மூலம் அறியலாம் எனத் தீர்மானித்தனர்.

கடற்படைப் படகுகள் இரண்டும் அந்த நோக்கத்துடன் கரையை அண்மித்தன. படகுகளில் இருந்த படையினர் கரையில் குதித்த போது திடீரென வேட்டுகளும், றொக்கட் லோஞ்சர்களும் முழங்கத் தொடங்கின. சிறியரக ஆயுதங்களுடன் மட்டும் சென்று கரையில் குதித்த கடற்படையினருக்குச் சிந்திக்க நேரமிருக்கவில்லை. கடற்கரையில் மிகவும் பாதுகாப்பானவையாக அமைக்கப்பட்டிருந்த பதுங்குக் குழிகளில் இருந்து தாக்குதல் வருவதை அவதானித்த கடற்படையினர் உடனடியாகப் பின்வாங்கினர்; கடற்படைத் தலைமையகத்துக்கு உடன் தகவல் தெரிவித்தனர்.

பல மைல்தூரம் நீண்ட கடற்கரையோர பிரதேசத்தில், சுண்டிக்குளம் பகுதியில் மட்டும் மிகப் பாதுகாப்பான பதுங்குக்குழிகளை அமைத்து, கடற்படையின் வருகையை எதிர்பார்த்து எந்நேரமும் தயாரான நிலையில் புலிகள் காத்திருந்தது ஏன்?

இந்தப் பின்னணியில் தனது விசாரணைகளைப் படைத் தலைமைப்பீடம் முடுக்கி விட்ட போதே, சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய்ப் பகுதியில் புலிகளின் 'ராடர்' நிலையம் இருப்பது பற்றிய தகவல் படைத் தலைமைப் பீடத்துக்குத் தெரியவந்தது.

புலிகள் எதிர்பார்க்காத விதத்தில் அதன் மீது ஓர் அதிரடித் தாக்குதலை நடத்தி 'ராடர்' நிலையத்தை அழிக்கும் கூட்டுப்படைத் திட்டம் அவசர அவசரமாகத் தயாரானது.

அந்தத் திட்டம் என்ன? அதனைப் படைகள் எப்படிச் செயற்படுத்தின? புலிகள் எடுத்த பதில் நடவடிக்கை என்ன? அரசுப் படைகளின் திட்டம் வெற்றியளித்ததா? — அடுத்துவரும் கட்டுரைத் தொடர்களில் அதனைப் பார்ப்போம்.

(வளரும்)

---

## கற்பிட்டியில் இறந்த தமிழ் இளைஞர்கள்

### விசாரணை கோருகிறார் எம். பி

கொழும்பு, நவ. 3

கற்பிட்டிக்கடலில் குதித்து தற்கொலை செய்துகொண்டனர் என்று கூறப்படும் இரு தமிழ் இளைஞர்களின் மரணம் சம்பந்தமாக பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ. எம். இல்யாஸ் மேற்கண்டவாறு பொலீஸ் உயர் பீடத்தைக் கேட்டுள்ளார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கடந்தமாதம் 14 ஆம் திகதி கற்பிட்டிப் பொலீஸார் கடலில் ரோந்து சென்றபோது உச்சி முனைத் தீவுக்கும், சிராமுந்தல தீவுக்கும் இடையில் படகு ஒன்றை எதிர் கொண்டனர் - அதனை அவர்கள் சுற்றி வளைத்த போது அதில் இருந்த இரு தமிழ் இளைஞர்களும் கடலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இவர்களது சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக 82 மைல் தூரத்தில் உள்ள குருநாகல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கற்பிட்டிக்கு அருகே புத்தளம், சிலாபம் தள வைத்தியசாலைகள் உள்ளன, அங்கு பிரேத பரிசோதனை நடத்தாமல் குருநாகலுக்கு சடலங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

ஆகவே இவர்கள் கடலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்களா என்பது குறித்தும் —

பிரேத பரிசோதனை விவரங்கள் குறித்தும் - பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று டாக்டர் இல்யாஸ் கோரியுள்ளார்.

(இ)

---

## 'பிரீவ் கேஸ்' ஏற்படுத்திய பரபரப்பு!

கொழும்பு, நவ. 3

கொட்டாஞ்சேனையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தென் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் தவறுதலாக விட்டுச் சென்ற 'பிரீவ் கேஸ்' பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தப் பெட்டியை கண்டெடுத்த கடைக்காரர் உடனடியாகக் கொட்டாஞ்சேனை பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

இது குறித்து இராணுவ குண்டு செயலிழக்க வைக்கும் பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டது.

மேற்படி 'பிரீவ் கேஸ்' ரட்ணம் மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது. [illegible]கள் மட்டுமே இருந்தன.

(இ)

---

## சகல மக்களும் ஏற்கக்கூடிய தீர்வுக்கே ஐ. தே. க. ஆதரவு

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ, 3

''தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பெரும்பான்மை மக்களின் அச்சங்களையும் தீர்க்கக் கூடிய ஒரு தீர்வையே நாங்கள் கருத்தில் கொண்டு செயற்படுகிறோம்''

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த அவர் அந்த விஜயத்தின் பலாபலன் குறித்து கொழும்பு தமிழ் பத்திரிகைக்கு அளித்தபேட்டி ஒன்றிலேயே இப்படிக் கூறினார்.

எல்லோருடைய விருப்பங்களுக்கும் இசைந்து போகக் கூடிய அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஒரு தீர்வை நோக்கியே நாம் செயற்படுகிறோம்.

பிரிட்டனில் இருந்த சமயம் சந்தித்த வெளிநாட்டுத் தலைவர்களிடம், நாட்டின் யுத்த நிலை பற்றியும், பாதுகாப்பு சீர்குலைந்து வருவது பற்றியும் கருத்துப் பரிமாறிக் கொண்டேன்.

சுவிட்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர், ஜெர்மனி வெளிவிவகார அமைச்சர். பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஆகியோருடன் கருத்துப் பரிமாறிக் கொண்டேன்

அரசாங்கத்தின் போர் முயற்சிகள் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரவுமில்லை; நாட்டை தீர்வை நோக்கி முன்னெடுத்துச் செல்லவுமில்லை என கருத்து தெரிவித்துள்ளேன்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 இலட்சம் அமெரிக்க டொலர் லஞ்சம்:

# ஜெயலலிதா மீதான விசாரணைக்கு 'இன்டர்போல்' உதவி கோரப்பட்டது

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 3 இலட்சம் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொண்டது தொடர்பான வழக்கில், இந்த வெளிநாட்டுப் பணம் எங்கிருந்து வந்தது என்பதைக் கண்டறிவதற்காக மத்திய புலனாய்வுத்துறை 'இன்டர்போல்' (சர்வதேசப் பொலீஸ்) மற்றும் சர்வதேச அமைப்புக்களின் உதவியை நாடியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் செல்வி ஜெயலலிதா தொடுத்திருந்த முன் பிணை மனுவுக்கு எதிராக மத்திய புலனாய்வுத்துறை சமர்ப்பித்துள்ள மனுவில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவுக்கு முன் பிணைவழங்கினால் அது இந்த வழக்கின் விசாரணையைப் பாதிக்கும் எனவும் —

காவலில் வைத்திருந்து விசாரணை செய்யும் உரிமையை புலனாய்வுத்துறை இழக்க நேரிடும் எனவும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை நாளை திங்கட்கிழமை நடைபெறும். (இ-10)

## உலகில் ஆயுதப் படைகளில் $2\frac{1}{2}$ இலட்சம் சிறுவர்கள்!

### 33 சண்டைகளில் ஈடுபாடு

லண்டன் நவ. 3

7 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிறார்கள் கடந்த ஆண்டு உலகில் 33 சண்டைகளில் ஈடுபட்டார்கள் என ஒரு மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

சில நாடுகள் சுமார் 16 வயதுடைய சிறார்களை இராணுவத்தில் சேர்க்கின்றன எனக் கூறும் ''சிறுவர் பாதுகாப்பு நிதியம்'' என்னும் சர்வதேச தொண்டர் அமைப்பு, இராணுவத்தில் சேர்க்கப்படுவதற்கு 18 வயதே குறைந்த வயதாகத் தீர்மானிப்பதற்கான முயற்சிகளுக்கு பிரிட்டன், கனடா, கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தவருகின்றன எனத் தெரிவித்துள்ளது.

தானாக அல்லது கட்டாயமாக இராணுவத்தில் சேரும் அல்லது சேர்க்கப்படும் சிறார்கள் பெரும்பாலும் சமுதாயத்தில் மிகவும் ஏழையான அல்லது ஓரங்கட்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என அந்த அமைப்பின் 250 பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## 36 மணித்தியாலத்தின் பின் மீட்கப்பட்ட இரு பெண்கள்!

கெய்ரோ, நவ. 3

கடந்த வாரம் எகிப்தில் 12 மாடிக்கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இறந்தோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. 9 பேரின் நிலை இன்னும் அறியப்படமுடியவில்லை.

இடிபாடுகளுக்கிடையே 36 மணித்தியாலங்கள் தாக்குப் பிடித்து உயிரோடு போராடிய இரண்டு பெண்கள் கடைசியாக மீட்கப்பட்டுள்ளனர்.

அருகருகே சிக்கிய இந்த இரு பெண்களுக்கும் இடையில் பெரிய கல் ஒன்று விழுந்து கிடந்தது.

ஒருவரை ஒருவர் கைநீட்டி ஆறுதலும் நம்பிக்கையுமூட்டிக் கொண்டிருந்ததாகவும், கடவுளை நோக்கி உருக்கமாக மன்றாடிக்கொண்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஒரு நிமிடத்தில் ஆயிரம் முறைகள் தாங்கள் மரணித்ததுபோன்ற அனுபவத்தை அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-10)

## உலக அரங்கில்

### கௌதமாலா: விமான விபத்தில் 14 பேர் பலி

கௌதமாலா நாட்டில் இடம்பெற்ற ஒரு விமான விபத்தில் 14 பேர் இறந்துள்ளனர்.

மாயா இன மக்களின் பண்டைய நாகரிகச் சின்னங்களைப் பார்க்கச் சென்ற பயணிகளின் விமானமே காட்டில் விழுந்து நொருங்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈராக்மீதான தடை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பு

1990 ஆம் ஆண்டு ஈராக் மீது விதிக்கப்பட்ட சர்வதேசப் பொருளாதாரத் தடையை மேலும் 6 மாதங்களுக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை நீடித்துள்ளது.

ஆயுதங்களை அழிப்பதில் ஐ. நா. வோடு ஈராக் ஒத்துழைக்கவில்லை என்பது தடை நீடிப்புக்கு முக்கிய காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## முர்தாஸா கொலையில் 11 பொலீஸார் கைது!

இஸ்லாமாபாத், நவ. 03

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் சகோதரர் முர்தாஸா கொலை சம்பந்தமாக பாகிஸ்தானில் 11 பொலீஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முர்தாஸாவும் அவரது ஏழு ஆதரவாளர்களும் கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி காராச்சியில் உள்ள அவரது வீட்டுக்கு அருகில் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

இது ஓர் அரசியல் கொலை என்றும்—

தனது அரசாங்கத்துக்கும், தனது குடும்பத்துக்கும் எதிரான சதி என்றும்—

பிரதமர் பெனாஸிர் பூட்டோ கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட்டு வரும் வேளையில், கொலைக்கு பொறுப்பானவர் யார் என்பதைத் தாம் கூறவிரும்பவில்லை என்றார் அவர்.

இச்சம்பவம் குறித்து சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், தலைமைக் கான்ஸ்டபிள்கள் இருவரும், 8 கான்ஸ்டபிள்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக சிந்து மாகாண பொலீஸ் அறிக்கை ஒன்று தெரிவித்தது. (உ-3)

## அமெரிக்க தேர்தல் சூடு பிடிப்பு

வாஷிங்டன் நவ. 3

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாள்கள் மட்டும் இருக்கும் வேளையில் ஆசியாவிலுள்ள பெரிய வாணிப நிறுவனங்கள் அதிபர் பில்கிளின்டனின் தேர்தல் பிரசாரங்களுக்கு கோடிக் கணக்கில் பணம் கொடுத்தன என்ற குற்றச்சாட்டு சூடுபிடித்து வருகிறது.

அத்துடன் அதுவே பிரசாரத்தின் இறுதிக்கட்ட விவாதமாகவும் மாறி உள்ளது

மக்கள் கருத்துக் கணிப்புகளில் இதுவரை கிளின்டனுக்கு இருந்து வந்த ஆதரவு கணிசமான அளவு குறைந்துள்ளதாக ரோய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. (இ-10)

## சூதாட்டத்துக்கு அனுமதி

புதுடில்லி, நவ. 03

இந்திய மாநிலங்களில் ஒன்றான கோவாவின் கடற்கரையோரக் கேளிக்கை விடுதிகளில் சூதாட்டத்துக்கு சட்ட பூர்வ அனுமதி வழங்கும் அரசின் திட்டத்துக்கு அப்பகுதி திருச்சபை, மற்றும் தொண்டர் நிறுவனங்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக இத்தகைய செயல்பாடுகளை அனுமதிப்பதாக கோவா மாநில அரசு அறிவித்துள்ள போதிலும், சூதாட்ட விடுதிகள் மூலம் குற்றங்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன என திருச்சபை அச்சம் தெரிவித்துள்ளது. (இ-10)

பாரிஸ் கொலைகள்:

# விடியோ படம் மூலம் கொலைஞனை கண்டு பிடிக்க பொலீஸார் முயற்சி

கொழும்பு, நவ. 3

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயலகத்தின் நிதிப் பிரிவின் தலைவர் கந்தையா பேரின்பநாதனும்—

பாரிஸில் இருந்து வெளிவரும் ''பாரிஸ் ஈழமுரசு'' பத்திரிகை ஆசிரியரான கந்தையா கஜேந்திரனும்—

பாரிஸில் சுடப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட வீடியோ படம் பிரெஞ்சுப் பொலீஸாரிடம் சிக்கி இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோ படம் மூலம் கொலைஞனைக் கைதுசெய்ய முடியும் என பிரெஞ்சு பொலீஸார் நம்புவதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தப் படுகொலைகள் தொடர்பாகப் பிரெஞ்சு பொலீஸார் பலரை விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர்.

கொலைஞனைப் பிடிக்க தடயங்கள் கிடைத்துள்ளதாக பொலீஸார் கூறியுள்ளனர். (இ-3)

## கிழக்கு இளைஞர் இருவர் களுத்துறைப்பகுதியில் கைது

மட்டக்களப்பு, நவ. 3

மட்டக்களப்பு குச்சவெளிப் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் களுத்துறைப்பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகமுத்து சிவராஜா, சிவராஜ் ராஜேந்திரன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு மத்துகம மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளதாகவும் -

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் புலிகள் இயக்கத்தில் யுத்தப் பயிற்சி பெற்றவர்களென பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் - செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)

## அமைதியின் பொருட்டு...

பேசுதல் வேண்டும்; உள்ள
பிசகுகள் நிமிர்த்த வேண்டும்;
தூசுகள் துடைக்க வேண்டும்;
தூய்மைகள் துலக்க வேண்டும்;
காசுகள் மிஞ்ச வேண்டும்;
'கன்ற்/றியும்' உயிர்க்க வேண்டும்;
பேசுதல் வேண்டும் என்றால்
பிரிப்பது மானம் ஒன்றே!

— எடுத்தாள்வார்.

## மக்கள் முகம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய உப அதிபராக த. இராஜரட்ணம் கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழில் நுட்பக்கல்லூரியில் வணிகத்துறைத் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி வந்தார்.

முன்னைய உப அதிபர் மு. விக்னேஸ்வரன் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இவர் இராஜரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-4)

## மனிதன் வாழ்வதற்காகவே தாம் வாழும் மரங்கள்!

மனித இன நல்வாழ்விற்கு மரங்கள் உயிர்காக்கும் தோழனாக உதவுகின்றன, என்பதை நம்மிற்பலர் உணர்ந்தாரில்லை. நம்முன்னோர்கள் மரத்தை தெய்வ வழிபாட்டுக்குரிய பொருளாக மதித்து தங்கள் இஷ்ட தெய்வங்களை அதன் மூலம் வழிபட்டிருக்கிறார்கள்.

நமது ஆலயங்களில் ஸ்தல விருட்சமாகவும் நம் முன்னோர்கள் மரத்தைப் பேணி வந்தனர். மண் வளத்தை மாத்திரமல்ல மனிதன் மனவளத்தையும் உயர்த்தும் தன்மை மரத்திற்குரியதாகக் காணமுடிகிறது. மகரிஷிகளும், யோகிகளும் அரசு, வேம்பு போன்ற மரத்தடியை தங்கள் ஞானவழிக்கு சிறந்த இடமாக தேர்ந்தெடுக்கிறார்கள் என்று அறியமுடிகிறது

வேம்பை நம் வீட்டுக்கு முன் வைத்திருப்பது நோய் தீர்க்கும் வைத்தியரை நம் வீட்டில் வைத்திருப்பதற்கு மேலாகும். ஏனெனில் நோய் வந்தபின்தான் வைத்தியர் தடுக்க உதவுவார். வராமலேயே தடுக்க வல்லது வேம்பு. இது போன்று உயிர்காக்கும் மருத்துவ குணங்கள் உடையமரங்கள் கணக்கில் அடங்கா.

சுருங்கச் சொன்னால் மனிதர்கள் வாழ்வதற்காகவே மரங்கள் வாழ்கின்றன. ஏன் உயிரினங்கள் வாழ்வதே மரங்களினால் தான் எனலாம். உயிரினங்கள் விடும் மூச்சிலுள்ள விஷக்காற்றான கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு பிராணவாயுவை அளித்து மனிதனின் உயிர் காக்கிறது மரம்.

தமிழ் வளர்த்த ஒளவை மூதாட்டி திடமுடன் நெடுங்காலம் வாழ அதியமான் நெல்லிக்கனியை கொடுத்து உபசரித்தான். ஊட்டச்சத்து மிகுந்த எத்தனையோ வகையான கனிகளைக் கொடுத்து நம்மை வாழ வைக்கிறதுமரங்கள்.

இத்தனை தன்னலமற்ற சேவை செய்யும் தாவர இனத்திற்கு பகுத்தறிவுள்ள மனிதன்செய்யும் கைம்மாறு என்ன தெரியுமா? தேவையற்ற முறையில் கண்மூடித்தனமாக அவ்வினத்தை அழித்து வருவது தான். இந்தத் தவறை உணர்த்தவே அருள்ஜோதி வள்ளலார் பெருமான் என்ன பாவம் செய்தேனோ என்று பாடியுள்ளார்.

இப்படி மரங்களை அழித்ததின் தண்டனையை இன்று நாம் அனுபவிக்க நேர்ந்தது. பருவ மழை தவறுவதற்கும், கடுமையான வரட்சி வாட்டுவதற்கும் நாம் வெகுவாக மரங்களை அழித்தது தான் காரணம் என்று ஆன்றோர்களும், விஞ்ஞானிகளும் உறுதியாகக் கூறியுள்ளதை நாமனைவரும் அறிவோம்

இந் நிலை மாற வீட்டிலும், வெறும் வளவிலும், வீதியின் மருங்கிலும் மரங்களை நடுவதற்கு இன்றே தொடங்குவோம்.

தொகுப்பு: க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'மொறிஸ் ஒக்ஸ்பேட்' கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr K. T. சிவபாதம், டச்சுறோட், சாவகச்சேரி. (சி/3382)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாக கடை ஒன்று வாடகைக்கு உள்ளது. தொடர்பு: எழுத்தோவியர் அகிலன்ஸ், 426, கண்டி வீதி, அரியாலை. (43456)

## மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 39 வயதுடைய படித்த தொழில் அனுபவமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனமாக யாழ் நகரில் காணியும், ரொக்கப்பணமும், நகையும் கொடுக்கப்படும். தொடர்பு மே/பா இல. 553, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43434)

## மரம் நட்டு பயன் பெறுக

மூலிகை, நிழல், விறகு, நந்தவனம் மற்றும் உணவுக்குரிய மரக்கன்றுகள் – ஒவ்வொன்றும் ரூபா 10/-: அல்லது 25 வெற்றுப் பால் மா பக்கற் நல்லதைச் சேர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ''மில்க்வைற்'' (சி-3385)

## தவறிவிட்டது

21 - 10 - 96 இல் இரத்மலானை விமான நிலையத்தில் ஒரு கட்டு கடிதம் பரிசோதனை வேளை தவறுதலாக விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் விலாசத்திற்கு அறியத் தரவும். சி. தம்பையா, ''ஏதேன்'', உடுவில், சுன்னாகம். (43461)

## காணவில்லை

சிவநேசன் சுபேந்திரன் 11/4சந்தானமாதா ஒழுங்கை, சுண்டுக்குளி ஆகிய எனது கடவுச்சீட்டு, தொழில்நுட்பக் கல்லூரி அடையாள அட்டை, மாநகரசபை பற்றுச்சீட்டு மேலும் முக்கிய ஆவணங்கள் குறுசோல் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறப்பட்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-3451]

## நியமனம்

இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசியாக திருமதிஷிரானி பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறையின் பீடாதிபதியாக பணியாற்றி வந்த இவருக்கு தற்போது வயது 38.

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைமால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேற்றின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
[43460]

---

# 31 ஆம் நாள் அன்பின் நினைவு



மலர்வு: 05 — 02 — 1923

உதிர்வு; 04 — 10 — 1996

## திருமதி ஞானம்மா யக்கோமுத்து


அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை 04 - 11 - 96 திங்கள் காலை 11.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

26, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
(43467)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்

பிறப்பு: 26—03—1937

மறைவு: 15—11—1995

திதி: ஐப்பசிமாத அபரபட்ச அட்டமி (3-11-96)

தாவடியை வாழ்விடமாகக் கொண்டிருந்த எங்கள் குடும்பம் இடம்பெயர்வால் அல்லலுற்று மீசாலையில் வாழ்ந்தபோது ஏற்பட்ட இத்துயரச் சம்பவம் என்றும் எங்கள் மனதைவிட்டு அகலாமல் நிலைத்து விட்டது. தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி மறப்பது நன்றன்று; மீசாலை கிழக்கில் நாங்கள் குடியிருந்த வீட்டின் உரிமையாளர் திருமதி ஐயாத்துரை, அவரது மகள் விமலா அன்ரி ஆகியோர் எமக்கு ஆற்றிய பேருதவிகளை என்றும் நினைவு கூருகிறோம் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.

''ஜெயபதி''
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(43449)

---

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக இடம்பெற்று வந்த ''உடற்கல்வியும் விளையாட்டுகளும்'' எனும் அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெறும்.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி வைபவத்தில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சான்றிதழ்களை வழங்குவார். (இ)

---

# முகாம்களின்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பு ஏற்பட்டுள்ளது. புலிகளைவிட படையினர் தரப்பில் இழப்பு அதிகம் என்றும் சொல்லப்படுகிறது.

மரபுப்போர்முறையில் முன்னேறும் படையினரை புலிகளால் ஒருவரையறைக்கு மேல் தடுத்து நிற்க முடியாது

ஆனால் வன்னிப் போர் முனையில் 'சத்ஜய' வின் மூன்று கட்டங்களிலும் படையினருக்கு புலிகள் பலத்த இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். மூன்று டாங்கிகள் புலிகளால் அழிக்கப்பட்டன; மேலும் மூன்று டாங்கிகள் சேதமாக்கப்பட்டன.

'சத்ஜய' முதல் இரு கட்டங்களிலும் படையினரால் புலிகளை மீறி முன்னேற முடியவில்லை. பின்னர் படை பலத்தை மேலும் அதிகரித்துக் கொண்டுதான் முன்னேற முடிந்தது.

10 ஆயிரம் படையினருக்கு மேல் களத்தில் இறக்கப்பட்டனர்.

புலிகள் தரப்பில் இரண்டாயிரம் பேர் வரையான புலிகளே களத்தில் இறக்கப்பட்டனர்.

அவ்வாறு இருந்தும் போர் முனை நிலவரம் உக்கிரமாக இருந்தது. புலிகளுக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியதாக அரசு பிரசாரம் செய்வதன் மூலம் 'சத்ஜய' வெற்றிக்குத் தாம் கொடுத்த விலையை அரசாங்கம் மெல்ல மூடி மறைத்திருக்கிறது

### வன்னியில் முன்னேற இழப்பும் அதிகரிப்பு

வன்னியில் தொடர்ந்தும் படையினர் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் இழப்புக்கள் அதிகமாகவே இருக்கும்.

புலிகள் இதுவரை ஆட்லறிப் பீரங்கிகளைப் பயன்படுத்தவில்லை; 120 எம். எம். மோட்டார் குண்டுகளை ஓரளவு பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

படையினர் தொடர்ந்து முன்னேறினால் ஆட்லறிகளைப் புலிகள் பயன்படுத்தலாம். கிளிநொச்சி சண்டையில் ஆட்லறிப் பீரங்கிகள் புலிகளால் கொண்டுவரப்பட்டால் அவற்றை அழித்துவிட விமானப்படை விமானங்கள் சுற்றித் திரிந்தன.

தற்போது முல்லைத்தீவுப் பகுதியில் காடுகளுக்குள் நடத்தப்படும் விமானத் தாக்குதலின் நோக்கமும் ஆட்லறிப் பீரங்கிகளைத் தாக்கி அழித்துவிடுவது தான். அதனை வெளிப்படையாகச் சொல்ல முடியாது என்பதால், பிரபாகரனை தேடித் தாக்குதல்கள் நடத்துவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

### மக்களின் அவல நிலை.

ஆகவே, இழப்பதும், பிடிப்பதும் என்ற நிலையில் போர் தொடர்கிறது. முழுமையாகப் பிடிப்பது என்ற கட்டத்துக்குள் செல்வதற்கு இரு தரப்புக்கும் பலம் போதுமானதாக இல்லை

முல்லைத்தீவை புலிகள் பிடித்தார்கள். கிளிநொச்சியை படைகள் பிடித்தனர். ஆனால் மக்கள்? அவர்கள் ஓடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். இரு தரப்புக்கும் வெற்றி — தோல்வி மாறி மாறி வரும். நிரந்தரமாக இருப்பது மக்களின் அவலம் மட்டும்தான். ★

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 03 — 05 — 1911

உதிர்வு: 15 — 11 — 1995

## அமரர் இ. பொ. குமாரசாமி

அவர்கள்

திதி: 03 - 11 - 1996 ஞாயிறு

(கோண்டாவில் இந்து மகாவித்தியாலய முன்னாள் அதிபர், நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் முன்னாள் தலைவர், கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலையின் முன்னாள் தலைவர், அ. இ. த. ஆசிரிய சங்கத்தின் முன்னாள் தனாதிகாரி)

எங்கள் குடும்பத்தில் தந்தைக்குத் தந்தையாய், எம்மைப் பாசமுடன் வழிநடத்திய அன்புத் தெய்வமாகிய ஐயா!

ஆண்டு ஒன்று மறைந்தாலும் எம் உயிர் உள்ளவரை உங்களை மறவோம் உங்களது முதலாவது ஆண்டுத்திதியான இன்று தங்கள் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.
(43429)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வாக்குறுதிக்கு பிந்திய நிலை

வடக்கில் படையினரால் கைது செய்யப்படுவோரைக் காவலில் வைத்திருப்பது, அரசு அளித்த வாக்குறுதியை மீறும் செயலாகும் — என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. துரைராஜசிங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை மகஸீன், களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 106 இளைஞர்களை விடுதலை செய்யக் கோரி, நீதி அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் அவர் இதனைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து — வலிகாமத்திலிருந்து — இடம்பெயர்ந்து மீளக் குடியமர வருவோருக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படும். விடுதலைப் புலிகளுடன் ஏதேனுமொரு விதத்தில் சம்பந்தப்பட்டிருந்தோருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று அரசு அப்போது அறிவித்திருந்தது. அந்த வாக்குறுதியை நம்பியே வலிகாமம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். —

அவ்வாறு திரும்பியோரில் கைது செய்யப்பட்டவர்களே இப்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண இளைஞர்கள் ஆவர். அவர்களைத் தடுத்து வைத்திருப்பதானது அரசு தனது வாக்குறுதிகளை மீறுகின்றது என்ற அர்த்தத்தையே தருகிறது — என்று துரைராஜசிங்கம் தமது கடிதத்தில் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

கூட்டணி எம்.பி குறிப்பிடும் யாழ்ப்பாண இளைஞர்கள், தாம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துச் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்ததும், சட்ட மாஅதிபரின் பிரதிநிதி அளித்த வாக்குறுதியின் பேரில் கடந்த வார இறுதியில் அதனைக் கைவிட்டதும் தெரிந்தவையே.

பாரிய குற்றம் புரியாதவர்கள் பிணையில் விடப்படுவர்.

வழக்குத் தொடரப்படக் கூடியவர்கள் மீது ஆறு வாரங்களுக்குள் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

வழக்கை எதிர்நோக்க வேண்டி வருவோர் பிணை கோரி மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவர்.

மேற்கண்ட மூன்று வாக்குறுதிகளை ஏற்றுக் கொண்டே உண்ணாவிரதமிருந்த இளைஞர்கள் அதனைக் கைவிட்டுள்ளார்கள்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கம் தெரிவிப்பது போல, அரசு அளித்த வாக்குறுதி காப்பாற்றப்படுவதானால், இந்த இளைஞர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்துப் பிரஸ்தாபிக்க வேண்டிய தேவையில்லை.

அரசு தனது வாக்குறுதியைப் பின்னர் கைவிட்டு விட்டது என்பதனையே இந்த ஏற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறான விடயங்களிலேயே முடிவுகள் மாறுமாயின், வாக்குறுதிகள் நிறைவேறாதிருக்குமாயின் —

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, நியாயமான தீர்வு காண்பது, நீதியான சமாதானத்தை எய்துவது என்ற பெரிய விவகாரங்களில் தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கை கொள்வர் என்று எவ்வாறு எதிர்பார்க்கலாம்?!

தாம் ஏமாற்றப்படுகிறார்கள் என்று தமிழ் மக்கள் உணர்வதைத் தடுக்க அரசு உகந்த நடவடிக்கை மேற்கொள்வது மிக முக்கியமாகும்.

# சிறுபான்மையினரின் ஆதரவுடன் அரசாங்கம் அமைப்பது ஆபத்து

### மகாநாயக்கர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 03

''சிறுபான்மையினரின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் அமைப்பது மிகவும் ஆபத்தானது''

இப்படி அஸ்கிரிய மகாநாயக்கர் ஸ்ரீ பலிப்பான சந்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் ஒத்துழைப்பைப் பெற்ற அரசாங்கம் அமைப்பதால் ஏற்படும் ஆபத்துக்கு தற்போதைய அரசின் பங்காளியும் அமைச்சருமான எம். எச். எம் அஷ்ரப்பால் அரசாங்கத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் நல்ல உதாரணமாக அமையும் என்றும் அவர் கூறினார். (இ–10)

## குடிதண்ணீர் தட்டுப்பாடு

நெடுந்தீவு, நவ. 3

ஊர்காவற்றுறை வேலணை பகுதிகளில் குடி தண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிலது.

சமீபத்தில் இப்பகுதிகளில் கணிசமான மழை பெய்த போதும் கிணறுகளின் நீர் மட்டம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. (இ-111)

## மருத்துவ மாணவருக்கான செய்முறைப் பயிற்சி

### களுத்துறையில் சாத்தியமில்லை

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களுக்கு களுத்துறை அரசினர் வைத்திய சாலையில் அறுவைச் சிகிச்சை செய்முறைப் பயிற்சி அளிக்க எடுக்கப்பட்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு முன்னேற்பாடு காரணமாகவே இந்தப்பயிற்சி அளிக்க எடுக்கப்பட்ட முயற்சி கைகூடாமல் போயுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை வைத்திய நிபுணர் இல்லாததையடுத்து, யாழ் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களான 57 பேருக்கும் களுத்துறை ஆஸ்பத்திரியில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முயற்சி கைகூடாததால் இவர்களுக்கான பயிற்சியை இங்கேயே அளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (இ–3)

## இடம் பெயர்ந்தோருக்கான ஒரு மாத நிவாரணம்

### தற்போது வழங்கப் படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 3

குடா நாட்டில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒரு மாத நிவாரணம் தற்போது வழங்கப்படுவதாக செயலக புனர்வாழ்வுப் பிரிவு தெரிவித்துள்ளது

37ஏ 37பி ஆகிய முத்திரைகளுக்கே தற்சமயம் நிவாரணம் வழங்கப்படுவதாகவும்– இடம் பெயர்ந்தோரிடம் உள்ள நிவாரண முத்திரைகள் முடிவடைந்துள்ளதால், மக்கள் தம்மிடம் உள்ள நிவாரண அடிக்கட்டையைச் சமர்ப்பித்து இந்த நிவாரணத்தை ப. நோ. கூ: சங்கக் கிளைகளில் பெறலாம் என்றும் – தெரிவிக்கப்பட்டது (இ–3)

## ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு, நவ. 3

எதிர்வரும் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் குறித்தும்- அரசின் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்தும்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை அரசாங்கக்கட்சி நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு விளக்கம் அளிப்பார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–10)

## வன்னிக்கு மருந்து கடத்த முயன்றாராம்

கொழும்பு, நவ. 3

வவுனியாவில் இருந்து சட்டவிரோதமாக 30ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை வன்னிக்கு கடத்த முயன்ற பெண் ஒருவர் தாண்டிக்குளத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மனிதர்களைத் தேடி இறைவன் வந்தது ஏன்?

''இதோ படைப்பிற்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.'' — இது இயேசுவின் பிறப்பைப் பற்றி வானவர் கூறிய செய்தி.

''உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' — இது மரணித்து உயிர்த்த இயேசு தன்னுடைய சீடர்களுக்குக் கூறிய செய்தி

இக்காலத்தில் திருச்சபை படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய தனது அந்தக் கடமையை மீளவும் ஒருமுறை உயிர்ப்பித்துக் கொள்கிறது.

இயேசுவின் பிறப்பிலும், பின்பு அவரது உயிர்ப்பிலும் இன்று திருச்சபையின் பணியிலும் மக்களுக்கெல்லாம் வழங்கப்பட்ட இந்த நற்செய்தி என்ன?

ஒருகாலத்தில் இயேசுவின் இந்தப் பணிப்பு எல்லா மக்களையும் மதம் மாற்றி திருச்சபையில் சேர்ப்பதற்கான கட்டளை எனக் கருதப்பட்டது. அதனால் குருக்கள் மக்களைப் பணம் பொருள் கொடுத்து ஏமாற்றி மதம் மாற்றுபவர்கள் என்றும் கருதப்பட்டது. ஆனால் இன்று இயேசுவின் பணிப்பு முன்னரை விட ஆழமான பொருளில் புரிந்து கொள்ளப்படுகிறது.

### ஞாயிறு நற்பிரசாதம்

இயேசு கொண்டு வந்த நற்செய்தி, மனிதனைத்தேடி இறைவன் வந்துள்ளார் என்ற செய்தியேயாகும்.

இறைவன் ஏன் மனிதனைத் தேடி வந்தார்?

மனிதனுடைய வறுமையை, அவனது தனிமையை, துன்பத்தை, சண்டை சச்சரவுகளை, அடிமைத் தனத்தை, மொத்தத்தில் விடுபட வழிதெரியாமல் அவன் அகப்பட்டிருந்த தீமை என்னும் விஷச் சக்கரத்தைப் பார்த்து, அதிலிருந்து அவனை விடுவிக்க—

அந்த விடுதலைப் பயணத்தை ஆரம்பித்து வைக்க, அந்தப் பயணத்தில் அவனோடிருந்து வழிநடக்க, சோர்வின் போதும் தளர்வின் போதும் தனது உயிர்ப்பால் நம்பிக்கையளிக்கவே அவர் வந்தார்.

ஆகவே துன்புறும் மக்கள் தங்கள் துன்பம் ஒரு முடிவுக்கு வருகின்றது. அதிலிருந்து விடுபடும் வெற்றிப் பயணம் ஆரம்பித்துவிட்டது. சமரசம் உலாவும் இறையரசுக்கான எக்காளம் ஊதப்பட்டு விட்டது என்ற நற்செய்தியை ஏற்று மகிழ்ந்து புதிய விண்ணும் புதிய மண்ணும் படைக்கும் இயேசுவின் படையணியில் சேர்ந்து கொள்வதே இன்றைய தேவையாகும்.

இறைவன் பணக்காரரையும் படித்தவரையும் அதிகாரம் பெற்றவரையுமல்ல, ஏழைகளையும் பாமரரையும் பலவீனமானவரையுமே தேடி வந்தார். அவர்களுக்கு வாழ்வளிக்க, விடுதலையளிக்க நிறைவளிக்கவே வந்தார்.

துன்புறும் மனிதனைத் தேடி மாபரன் வந்தார் என்ற இந்த நற்செய்தி மக்களது முழுமையான நிறைவை நோக்கிய விடுதலைப்பயணம் இறை திட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றது என்ற நற்செய்தி போரினால் துவண்டு போயிருக்கும் எம்மவர் எல்லோருக்குமே உண்மையான நம்பிக்கையின் செய்தியாக நற்செய்தியாக அமையட்டும்.

— அருட்திரு.
ம வீ.இ. இரவிச்சந்திரன்

### நாளை

ஐப்பசி 19
திங்கட்கிழமை
திதி: நவமி
பின் இரவு 5.07 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 3.36 வரை.
ராகுகாலம்: 7.34-9.04
சுபநேரம்: 12.04-1.34
([illegible] பழைய நேரப்படி)

## தமிழ் விஞ்ஞானக் கல்வி வளர உழைத்த சுந்தர்

''நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே'' என்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடன் வாதாடி வெற்றி கண்ட நக்கீரர் போல, க. பொ. த. உயர்தர விலங்கியல் விடைத்தாள்கள் திருத்தப்படும் போது தமிழ் மாணவ சமூகத்திற்கு அநீதி ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்காக துணிச்சலுடன் வாதாடிப் பலமுறை வெற்றி கண்டவை. சுந்தரலிங்கம் ஐயா அவர்கள் (யாழ்ப்பாண மாவட்ட விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர்) கடந்த மாதத்தில் எம்மை விட்டு மறைந்து விட்டார்.

அன்னாரின் திடீர் மறைவானது எமது விஞ்ஞான சமூகத்திற்கு குறிப்பாக விலங்கியலை ஒரு பாடமாகப் படிக்கும் விஞ்ஞானத்துறை மாணவருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

ஒரு சிறந்த விலங்கியல் பாட ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் தமது நீண்ட கால அனுபவத்தினை மாணவர் நலனுக்காகப் பயன்படுத்

### நீத்தார் நயப்புரை

தியவர். திருத்தமான தமிழ் மொழி பெயர்ப்பின்மை போன்ற காரணிகளால் தமிழ் மொழி மூல விலங்கியல் மாணவர்கள் சில வினாக்களுக்கு முழுமையான விடையளிக்கக் கஷ்டப்பட்டதுண்டு. அது அவர்களின் தவறன்று என்று சுட்டிக் காட்டி கடினமாக உள்ள வினாக்களுக்குரிய முழுப் புள்ளிகளும் தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பொறுப்பானவர்களுடன் வாதாடி பல தடவைகளில் தமிழ் மாணவ சமூகத்திற்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தவர் அமரர் சுந்தரலிங்கம் அவர்கள்.

மேற்படி செயல்முறையானது வினாக்களைத் திறத்தல் என்ற கருத்தில் ''ஓப்பின்'' (Open) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதால், சில ஆசிரிய நண்பர்கள், 'சுந்தரலிங்கம் ஐயாவை, ''Open Sir'' என்று குறிப்பிட்டு தமக்குள் கதைப்பது வழக்கம்–

விடைத்தாள்கள் திருத்தி முடிந்தவுடன் விலங்கியல் பாட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கருத்தரங்குகளை நடத்தி புள்ளி விவரங்களுடன் மேற்படி வினாத்தாள் தொடர்பான விளக்கங்களை அளிப்பார்.

எமது பகுதி மாணவர்கள் விஞ்ஞான பாடங்களில் பின்தங்கி விடக்கூடாது என்பதில் பெரும் அக்கறை கொண்டவர். அதற்காக மாணவர் மத்தியில் பல விஞ்ஞானப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தார். விஞ்ஞான கணித மூலவள நிலையத்தின் மூலம் கிராமப் புறங்களில் உள்ள சிறிய பாடசாலைகளிலும் விஞ்ஞானக் கல்வியை வளர்க்க உதவியவர் சுந்தரலிங்கம் ஐயா அவர்கள்.

யாழ்ப்பாணத்து விஞ்ஞானக் கல்வித்துறையும் விஞ்ஞான ஆசிரியர்களும், விஞ்ஞான மாணவர்களும் தன்னை நீண்ட நினைவில் வைத்திருக்கக் கூடியதாக அவரது சேவை சமூகத்தில் பதிந்துவிட்டது என்றால் அது மிகையாகாது.

க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தச் சென்ற வேளை கொழும்பில் அவர் உயிர் பிரிந்தது விஞ்ஞானக் கல்வியுடன் அவர் எந்தளவுக்கு ஒன்றித்திருந்தார் என்பதனை அவரது பிரிவு எடுத்துக் காட்டுகிறது.

தமது இறுதி மூச்சுவரை எமது விஞ்ஞான ஆசிரியர், மாணவர் சமூகத்தின் உயர்ச்சிக்காகப் பணியாற்றிய ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி அடைவதாக.

– சு. சிவனேசராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசின் தீர்வுத் திட்டத்தில்

# பொலீஸ் மா அதிபருக்குப் பதிலாக தேசிய பொலீஸ் ஆணையாளர்

கொழும்பு, நவ. 3

அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தில் இதுவரை நடைமுறையில் இருக்கும் பொலீஸ்மா அதிபர் பதவிக்கு பதிலாக தேசிய பொலீஸ் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவரின் கீழ் பிராந்தியப் பொலீஸ் ஆணையாளர்கள் கடமையாற்றும் விதத்தில்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தர்.

தேசிய பொலீஸ் ஆணையாளர் தேசிய பாதுகாப்பு, அரசுக்கு எதிரான வன்முறைகள், ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் ஆகியவற்றைக் கவனிப்பார்.

அத்துடன் பிராந்தியப் பொலீஸ் ஆணையாளர்களின் நடவடிக்கைகளையும் அவர் கண்காணிப்பார் என்றும் அமைச்சர் கூறினார்.

பொலீஸ் அதிகாரிகளுக்கு அரசின் தீர்வுத் திட்டம் குறித்து விளக்கும் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# பட்டதாரிகளுக்கு அளிக்கப்படும் பட்டம் வெறும் மட்டை தானா?

## பட்டதாரிகள் கேள்வி

கொழும்பு, நவ. 3

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், ஏற்கனவே பட்டம் பெற்று வெளியேறி வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் வெளியே நின்று எதிர்ப்புக் கோஷம் எழுப்பினர்.

பட்டதாரிகளுக்கு அளிக்கப்படும் பட்டம் வெறும் மட்டை தானா? என்று அவர்கள் கேட்டனர்.

படித்துப் பட்டம் பெற்ற பின்னர் தொழில் வாய்ப்புக்கள் நிச்சயமற்றதாக இருப்பதால் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் விதத்தில் தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரினர்.

'தகுதிக்கேற்ப அரசு வேலை வாய்ப்பை வழங்கும் திட்டத்தை அநுசரிக்க வேண்டும்.முன்னைய அரசுபோலவே இந்த அரசும் பட்டதாரிகளைக் கணக்கில் எடுக்கவில்லை என நேற்று பட்டம் பெற்ற பட்டதாரி ஒருவர் பி. பி. சிக்குத் தெரிவித்தார்.

தான் முகாமைத்துவத்தில் சிறப்புப் பட்டதாரிஎனத்தெரிவித்த அவர் தனக்கு ஆசிரியர் பதவி வழங்கப்படுமானால் அது தான் பெற்ற பட்டத்திற்கு பொருத்தம் அற்றது எனவும் கூறினார்.

''நாங்கள் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்று பட்டதாரிகளாக வெளிவந்துள்ளோம். இதற்காக நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம். எங்களுக்குப் பட்டதாரிகள் என்று ஒரு மட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எங்களுக்கு எங்கள் தகைமைகளுக்குப் பொருத்தமான எதிர்காலமில்லை.'' எனத் தெரிவித்தார் மற்றுமொரு பட்டதாரி.

நாட்டில் சுமார் 25 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் ஏற்கனவே உள்ளனர்.

நேற்று சுமார் 2 ஆயிரம் பேருக்கு பட்டதரரி பட்டமளிக்கப்பட்டுள்ளது.

இவர்களும் வேலையற்ற பட்டதாரிகள் அணியில் சேரும் போது இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடைவதை தவிர்ப்பதே கடினமாகும் என்று பி பி சி. தெரிவித்தது. (இ-10)

### வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ முகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டங்களைக் கவனிப்பதற்கு அகதிகள் என்ற போர்வையில் வவுனியா நகருக்குள் நுழைய இவர்கள் முற்பட்டனர் என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ-3)

### வன்னியிலிருந்து..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் திரும்பிச் செல்ல விரும்புவதாகவும்-

அவர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் - வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார். (இ-150)

### தட்டாதெருவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவரது சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ள பொலீஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

70 வயது மதிக்கத்தக்க வெள்ளைத்தாடியுடன்வேட்டி மட்டும் அணிந்திருந்த இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் என்றும்—

இவரிடம் இருந்த ஒய்வூதிய அட்டை, வங்கிப் புத்தகம் ஆகியற்றில் இருந்து இவரது பெயர் சின்னத்தம்பி கனகநாயகம் எனத்தெரிய வருவதாகவும்— பொலீஸார் தெரிவித்தனர்.

இவரது உறவினர்களை ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொள்ளுமாறு பொலீஸார் கேட்டுள்ளனர். (இ-3)

### டென்மார்க்கில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் கோப்பாயில் பிறந்தவர் என்றும்—

18 வயதுடையவர் என்றும் — தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெண்ணின் இருசகோதரர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று ''லங்கா புவத்'' தெரிவித்துள்ளது.

இந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க உதவுமாறு டென்மார்க்கில் உள்ள சர்வதேசப் பொலீஸாரிடம் இலங்கை கேட்டுள்ளது. (இ-3)


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் வல்லிபுரம்

பருத்தித்துறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் மாணிக்கம் - வல்லிபுரம் (உரிமையாளர், மொடேன் ரெக்ஸ்ரைல்ஸ், பருத்தித்துறை) 01-11-1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி இரத்தினத்தின் அன்புக் கணவரும், மேகநாதன் (நோர்வே), புவிநாதன், கமலராணி, கோகுலராணி, சடகோபன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குணசீலியின் (நோர்வே) மாமனாரும், விஜிதரன் (நோர்வே), ராகினி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று 2-11-96 சனி பிற்பகல் 2-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவருக்கும் துயரத்துடன் அறியத் தருகிறோம்.

தகவல்:
வ. புவிநாதன்
வ. கமலராணி
(பிள்ளைகள்)

ஐயனார் வீதி,
பருத்தித்துறை. (43459)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# திருநெல்வேலி சந்தையில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், நவ. 3

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரியவந்தது.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து சிப்பாய் வைத்திருந்த ஆயுதம் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# உலக யூனியர் சதுரங்க பட்டம் இந்தியாவுக்கு

மெட்றிட், நவ. 3

ஸ்பெயின் நாட்டில் கடந்த வியாழக்கிழமை முடிவடைந்த உலக சதுரங்கப் போட்டியில் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ரி. ஹரி கிருஷ்ணா என்ற சிறுவன் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான சதுரங்கவீரர் பட்டத்தை வென்றார்.

விஸ்வநாதன் ஆனந்திற்குப் பின்னர் உலக சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியர் இவரே ஆவார். 1987 இல் விஸ்வநாதன் ஆனந்திற்கு உலக யூனியர் சதுரங்கப் பட்டம் கிடைத்தது.



# ஆஸ்திரேலிய - இந்திய அணிகள் இன்று மோதும்

மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் முதற் சுற்று கடைசி ஆட்டத்தில் மொஹாலியில் இந்திய-ஆஸ்திரேலிய அணிகள் இன்று மோதவுள்ளன.

இன்றைய ஆட்டம் இரு அணிகளுக்கும் மிக முக்கியமானது

இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றால் 5 புள்ளிகளுடன் இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதியை அது பெறும்.

ஆஸ்திரேலியா வெற்றி பெற்றால் 3 புள்ளிகளைப் பெற முடிந்தாலும் ஓட்ட வீத அடிப்படையில் இந்தியாவை விட மேம்பட்ட நிலையில் உள்ளதால் அவ்வணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இதற்கிடையில் காயமடைந்துள்ள இந்திய ஆட்டக்காரர் சவ்ரவ் கங்கூலிக்குப் பதிலாக தமிழ்நாடு அணித் தலைவர் றோபின் சிங் இந்திய அணியில் இடம்பெறுகிறார் (இ-10)

# தொலைக்காட்சி பார்க்க அனுமதித்ததாலே தப்பினர்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 3

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களை சிறைச்சாலைக் கூண்டுகளுக்குள் வைக்காது திறந்த மண்டபத்தில் அவர்களை தொலைக்காட்சி பார்ப்பதற்கு இடமளித்ததாலேயே அவர்கள் தப்ப முடிந்தது

திருகோணமலை சிறை உடைப்பு சம்பவம் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான் தலுவத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறைச்சாலைக் காவலுக்கு அமர்த்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாகவும் அவர் கூறினார். (இ-3)

# கைதாகும் தமிழ் இளைஞரை விடுவிக்க நடவடிக்கைக்குழு

## ஐ. தே. க. அமைத்தது

கொழும்பு, நவ. 3

கொழும்பில் காரணமின்றிக் கைதாகும் தமிழ் இளைஞர்கள் பற்றி விசாரணை நடத்தி, இயலுமானவரை அவர்களை விடுவிக்க நடவடிக்கைக் குழு ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைத்துள்ளது.

கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி மிட்வீக் மிரர் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைக் குழுவில் டிரோன்பெர்னாண்டோ, ஜயலத் ஜயவர்த்தனா, ஏ. எச்.எம். அஸ்வர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

கொழும்பில் கைதாகும் தமிழ் இளைஞர்கள் பற்றிய விவரம் கிடைத்தவுடன் நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் உடனடியாக பொலீஸாருடன் தொடர்பு கொள்வார்கள் நாடாளுமன்றத்திலும் இது பற்றி குரல் எழுப்பப்படும்.

இதனிடையில் இடம்பெயர்ந்துள்ள எல்லா இன மக்களுக்கும் உதவுமுகமாக அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் உபகுழு ஒன்றையும் ஐ.தே.க. நியமித்துள்ளது. (இ-150)

# நெடுந்தீவு ப.நோ. கூ.ச. நடவடிக்கை

நெடுந்தீவு, நவ. 3

மழைக்காலம் ஆரம்பமாவதையடுத்து அத்தியாவசிய பாவனைப் பொருள்களைக் கையிருப்பில் வைக்க நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-111)

# ஈ.பி. ஆர்.எல்.எவ் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, நவ. 3

''உண்மை வெற்றி இராணுவ நடவடிக்கைகளினால் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்றும்—

அவர்களின் கஷ்டங்களைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் — ஈ. பி. ஆர். எல். எவ். வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் இருந்தவர்களும் வவுனியாவுக்கு வந்தவர்களில் அடங்குவர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கொள்ளை கோஷ்டி சிக்கியது

அரசாங்க உயரதிகாரி ஒருவருக்குச் சொந்தமான வாகனம் ஒன்றைப் பாவித்து பல கொலைகளையும் கொள்ளைகளையும்புரிந்துவந்தகோஷ்டி ஒன்றை நித்தம்புவ பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ-4)

# ஜே. ஆரின் இறுதிச்சடங்கு களனியில்

கொழும்பு, நவ. 3

முன்னாள். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இறுதிச் சடங்குகள் நாளை திங்கட்கிழமை மாலை பூரண அரச மரியாதைகளுடன் களனியில் நடைபெறும்.

இதற்கு முன்னர் இறுதிமரியாதைக்காக கொழும்பு சுதந்திரசதுக்கத்தில் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும்.

காலஞ்சென்ற ஜெயவர்த்தனாவின் குடும்ப உறுப்பினர்களுக்கும், பொதுநிர்வாக அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையே நேற்றுக் காலை இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே ஜெயவர்த்தனாவின் கடைசி விருப்பத்தின்படி களனியில் அவரது இறுதிச் சடங்குகளை நடத்த தீர்மானிக்கப்பட்டதாக அவரது செயலாளர் சந்திரதிலக மாபிட்டிகம தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org